(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **31**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 செப்தெம்பர் 04, செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் , டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கள் அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** சமூக வலுவூட்டல்கள் அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியசேன கமகே,** இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ எட்வட் குணசேகர,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொலைத்தொடர்புகள் , டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திறண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** கமத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ முத்து சிவலிங்கம்,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ திளும் அமுனுகம**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ தயாசிறி ஜயசேகர**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அப்துல்லா மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ நிமல் லான்சா

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ திலங்க சுமதிபால**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள் :** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2018 செப்தெம்பர் 03 ஆம் திகதி **‘மதுவரி (திருத்தம்)’** மற்றும் **‘அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம்’** எனும் சட்டமூலங்கள் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**II**

“இலங்கைப் பாராளுமன்றத்தின் படைக்கலச் சேவிதர் பதவிக்காக பிரதிப் படைக்கலச் சேவிதர் திரு. நரேந்திர பெர்னான்டோ அவர்கள் 2018 ஓகஸ்ட் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் வருடாந்த செயற்திறன் அறிக்கை மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் துருக்கிக் குடியரசிற்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 13 ஆம் திகதிய 2079/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனத்தினை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் கட்டண அறவீடுகளைத் திருத்துவது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 07 ஆம் திகதிய 2074/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளை மற்றும் ஒழுங்குவிதிகளை தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் சனாதிபதி அலுவலம், வன பரிபாலனத் திணைக்களம் மற்றும் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் என்பனவற்றின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் செயற்பாட்டு அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2018 ஆம் நிதியாண்டின் முதலாவது காலாண்டின் நிதிசார் செயலாற்றுகை தொடர்பான அறிக்கை;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை காப்புறுதிச் சபையினது ஆண்டறிக்கை;

(iii) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 2, 12, 22 மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 யூன் 13 ஆம் திகதிய 2075/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்;

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 10/2018) மற்றும்

(iv) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவின் கீழ் மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 யூன் 13 ஆம் திகதிய 2075/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்;

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 11/2018)

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகள் மற்றும் அறிவித்தல்கள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி அமைச்சு மற்றும் தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் என்பனவற்றின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை (ஈரான் தொடர்பான தடை விதிப்புகள்) தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஓகஸ்ட் 21 ஆம் திகதிய 2085/11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட 2018 யூலை 17 ஆம் திகதிய 2080/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து மேற்படி ஒழுங்குவிதிகளைச் சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் தேசிய பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகம் - கொழும்பு என்பனவற்றின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான சீதுவை விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையைச் சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய அருங்கலைகள் பேரவையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் என்பனவற்றின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(16) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் அரச நிருவாக முகாமைத்துவ அமைச்சு, சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, பொலிஸ் திணைக்களம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் என்பனவற்றின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(17) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ பிரிவின் கீழ் எஸ் எல் ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இலத்திரனியல் தொழில்நுட்பவியல் சிறப்பு இளமாணி பட்டம் வழங்கல் நிறுவனமாக ஏற்றுக்கொண்டு உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஒகஸ்ட் 10 ஆம் திகதிய 2083/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளையைக் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(18) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(19) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(20) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் தபால் திணைக்களம் என்பனவற்றின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் :** (1) சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ லக்கி ஜயவர்தன, அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) மருத்துவம் (திருத்தம்) சட்டமூலம்;

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான ஆயுர்வேத வைத்திய சபையின் வருடாந்த ஆண்டறிக்கைகள்;

(iii) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(iv) 2013 ஆம் ஆண்டுக்கான ஹோமியோபதி மருத்துவ சபையின் ஆண்டறிக்கை;

(v) 2014 ஆம் ஆண்டிற்கான இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை;

(vi) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை திரிபோஷ கம்பனியின் ஆண்டறிக்கைகள்;

(vii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை அரச மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள்;

(viii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள்;

(ix) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் ஆண்டறிக்கைகள்; மற்றும்

(x) 2017 ஆம் ஆண்டுக்கான சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ வடிவேல் சுரேஷ் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ நிஹால் கலப்பத்தி, அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் 25 அ மற்றும் 20(4) (ஆ) பிரிவின் கீழான கட்டளைகள்;

(ii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கைகளும் கணக்குகளும்;

(iii) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(iv) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முப்பத்தேழாவது வருடாந்த அறிக்கை;

(v) 2015 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும்;

(vi) 2015 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(vii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை றுஹுணு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(viii) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(ix) 2015 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியில் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(x) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை;

(xi) 2015 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(xii) 2015 ஆம் ஆண்டுக்கான கட்புல அரங்கக் கலைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(xiii) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(xiv) 2015 ஆம் ஆண்டுக்கான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(xv) 2015 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்விக் கல்லூரியின் ஆண்டறிக்கை;

(xvi) 2015 ஆம் ஆண்டுக்கான சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(xvii) 2015 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(xviii) 2015 ஆம் ஆண்டுக்கான கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வருடாந்த அறிக்கை;

(xix) 2015 ஆம் ஆண்டுக்கான தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை;

(xx) 2015 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழக, தேசிய நூலக, தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் ஆண்டு அறிக்கை;

(xxi) 2015 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழக, மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்;

(xxii) 2015 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருளியில் ஆய்வு பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை;

(xxiii) 2015 ஆம் ஆண்டுக்கான மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை;

(xxiv) 2015 ஆம் ஆண்டுக்கான மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர்கல்வி தொடர்பான தேசிய நிலையத்தின் ஆண்டறிக்கை;

(xxv) 2015 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச வைத்திய நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(xxvi) 2015 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீஜயவர்தனபுர பகல்கலைக்கழக முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(xxvii) 2016 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முப்பத்தெட்டாவது வருடாந்த அறிக்கை;

(xxviii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்கும்;

(xxix) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை பௌத்த பாளி பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(xxx) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(xxxi) 2016 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழக, உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(xxxii) 2016 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும்;

(xxxiii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(xxxiv) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கைகளும் கணக்குகளும்; மற்றும்

(xxxv) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள்.

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஹர்ஷன ராஜகருணா, அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டமூலம்;

(ii) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் கீழான கட்டளை;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் ஆண்டறிக்கை;

(iv) 2015 ஆம் மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை கொள்கை ஆய்வு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(v) 2017 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vi) 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vii) 2017 ஆம் ஆண்டுக்கான தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(viii) 2017 ஆம் ஆண்டுக்கான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்று அறிக்கை; மற்றும்

(ix) 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம். ஏ. சுமந்திரன் அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "காணாமற்போன நபர்கள் பற்றிய அலுவலகத்தின் அங்கத்தவர்களுக்கு ஊதியமொன்றைச் செலுத்தல் பற்றிய பிரேரணை அங்கீகாரம்" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) அகலவத்த, கெகுலந்தல, இல. 126 இல் வதியும் திரு. நிமல் சமரசுந்தரவினது 2018.07.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவைக் கௌரவ லக்கி ஜயவர்தன சமர்ப்பித்தார்.

(2) (i) மாத்தறை, சுல்தானாகொட, "பளேவில"வில் வதியும் திரு. சமிந்த பிரியசாந்த சூரியபண்டாரவினது 2018.06.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) சுல்தானாகொட, வரகாபிட்டிய, "பிரதீப்" எனும் முகவரியில் வதியும் திரு. எச்.ஜி. சிரிசேனவினது 2018.06.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மாத்தறை, குமாரதாஸ மாவத்தை, இல. 54 இல் வதியும் திருமதி ரூபலதா வெல்லஹேவாவினது 2018.07.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) மாதுராகொட, நித்துள்பிட்டிய எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ.ஏ. சுனில் ஜயசிங்கவினது 2018.07.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

(3) கொழும்பு 03, 8 ஆம் ஒழுங்கை, இல. 21/19/2/1 இல் வதியும் திருமதி விகங்கி மந்திரா பட்டபெந்திகேயினது 2018.07.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவைக் கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன சமர்ப்பித்தார்.

(4) (i) திருகோணமலை, டொக்யாட் வீதி, இல. 17 இல் வதியும் திருமதி ஏ.பி. குசுமாவதீ த சில்வாவினது 2018.08.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கொழும்பு 05, கெப்பட்டிபொல மாவத்தை, சமுலு நிவாஸ, இல. 19 ஏ யில் வதியும் திரு. சமல் சுதுசிங்க பியசுந்தரவினது 2018.07.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) குருணாகல், வந்துராகல, எல்வத்த முதலாம் ஒழுங்கை எனும் முகவரியில் வதியும் திரு. டி.ஆர்.எம்.சீ. ஹேனேகமவினது 2018.07.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) திருகோணமல, ஒர்ஸ் ஹில், நடுத்தர வீதி, இல. 21 இல் வதியும் திருமதி புனிதகுமார் சந்திராவதீயினது 2018.07.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே சமர்ப்பித்தார்.

(5) மெதிரிகிரிய, திவுலன்கடவல, ட்ரக் 9, இல. 824 இல் வதியும் திரு. என். டப்ளியூ.ஜி.எஸ்.ஆர். நாணாயக்காரவினது 2018.06.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவைக் கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன சமர்ப்பித்தார்.

(6) கண்டி, லேவெல்ல வீதி, இல. 109/1 ஏ யில் வதியும் திரு. டி.எம். அசோக திசாநாயக்கவினது 2017.10.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவைக் கௌரவ திலும் அமுனுகம சமர்ப்பித்தார்.

(7) கொழும்பு 02, வொக்சோல் வீதி, இல. 256/2 இல் வதியும் திருமதி என்.எம்.யூ. சுஹைபாவினது 2018.03.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவைக் கௌரவ முஜிபுர் ரஹுமான் சமர்ப்பித்தார்.

30 (10) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. நிதி: நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்** சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கும்; மோட்டார் வாகனங்கள் மீதான ஆடம்பர வரியையும், வாகன உரித்துடைமை அறவீட்டையும், வருடாந்தக் கம்பெனிப் பதிவு அறவீட்டையும், தனிசு மீள்கொடுப்பனவு அறவீட்டையும், கார்பன் வரியையும், செல்லிடத் தொலைபேசிக் கோபுர அறவீட்டையும் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவை அறவீட்டையும் விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

மேற்படிச் சட்டமூலம் 2018 செப்தெம்பர் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும், அச்சிடப்பட வேண்டுமெனவும், உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அங்கத்தவர்களுக்கு ஊதியமொன்றைச் செலுத்தல்**: பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக, அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பிரகாரம் தலைவர் உட்பட ஏழு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டதுடன் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அவ் அலுவலக அங்கத்தவர்களின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பதுடன், அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்கு செலவாக அமையுமாறு செலுத்தப்பட வேண்டியுள்ளதாலும்;

காணாமற்போன ஆட்களைத் தேடுதல், அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டறிதல் மற்றும் அவர்களது நிலைமை தொடர்பாக தெளிவுபடுத்திக்கொள்ளல் மற்றும் காணாமற்போனோரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு இழப்பீடு செலுத்துதல், உள சமூக ஆதரவு மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் காணாமற்போதல் சம்பந்தமான நிகழ்வுகளை குறைத்துக்கொள்ளுவதற்காக உரிய அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக இந்த அலுவலகத்திற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும்;

அதற்கமைய சனாதிபதியவர்கள், இந்த அலுவலகம் தொடர்பாக 2018 மார்ச் 22 ஆம் திகதி சமர்ப்பித்த அமைச்சரவை நிருபத்திற்கமைய 2018 யூன் 05 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் அங்கத்தவர்களின் ஊதியங்களைச் செலுத்துவதற்குப் பின்வருமாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்:-

(அ) இந்த அலுவலகத்தின் தலைவருக்கு ரூபா 100,000/- மாதாந்தக் கொடுப்பனவு, ரூபா 10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணம் மற்றும் மாதாந்தம் 225 லீற்றர் எரிபொருளுடன் உத்தியோகபூர்வ வாகனமொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும்; மற்றும்

(ஆ) ஏனைய அங்கத்தவர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவு, ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணம் மற்றும் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோமீற்றர் தூரத்தை வரையறுத்து ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோமீற்றர் அல்லது அதனிலும் அதிகளவு தூரத்திற்காக ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்கும்

அதற்கமைய, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அலுவலகத்தின் அங்கத்தவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகளை அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்குச் செலவாக அமையுமாறு செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. இலங்கையில் இன மற்றும் மத ஒற்றுமையை உறுதி செய்வதை ஆராய்ந்து அதன் விதப்புரைகளைப் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு**: அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—

இந்த வருடத்தின் மார்ச் மாத ஆரம்பத்தில் கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளில் அண்மைக்கால துரதிஷ்டவசமான சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டதனாலும்

2014 யூன் மாதத்தில் பேருவளைத் தேர்தல் தொகுதியிலும், 2018 பெப்ரவரி மாதத்தில் அம்பாறை மாவட்டத்திலும் துரதிஷ்டவசமான சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டதனாலும்;

அண்மைக்காலத்தில் வேறுபட்ட இன சமூகங்களுக்கிடையில் இன வெறுப்புணர்வு வளர்ச்சியடைவது உக்கிரமடைந்துள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளதனாலும்;

அத்தகைய சம்பவங்கள் பற்றி ஆராய்வதற்காக எதிர்காலத்தில் சமூகங்களுக்கிடையில் அவ்வாறான குற்றங்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்குப் பொருத்தமான பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்தும் தேவையொன்று எழுந்துள்ளதனாலும்;

2018 மார்ச் 10 ஆம் திகதி கண்டிப் பிரதேசத்தில், இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்து, இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய தகவல்களை ஆராயும் செயற்பாடொன்று அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் முழுமையான ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகரினால் தலைமைத்துவம் வழங்கப்பட்டுள்ளமையினாலும்;

குறிப்பிடப்பட்ட விஜயத்தின் விளைவாக, அனைத்து நாயக்க தேரர்களையும் ஏனைய மதிப்புக்குரிய மதத் தலைவர்களையும் சகல பாராளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள்/பிரதிநிதிகள்; உரிய அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள்; சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் தளபதிகள் ஆகியவர்கள் உள்ளடங்கலாக மாநாடு ஒன்றினைக் கூட்டுவதற்கு கௌரவ சபாநாயகரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு ஏற்ப 2018 ஏப்பிறல் 19 ஆம் திகதியும் அதற்குப் பின்னர் 2018 யூன் 29 ஆம் திகதியும் உச்சி மாநாடுகளை நடாத்தியுள்ளதனாலும்;

சகல இனக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பாராளுமன்றத்தின் ஆளும் கட்சி/ எதிர்க்கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய, கௌரவ சபாநாயகர் தலைமைத்துவம் வகிக்கும் "பாராளுமன்றத்தின் விசேட தெரிகுழு" ஒன்றைத் தாபிப்பதற்கான இயலுமை பற்றி ஆராய்தல் வேண்டுமென 2018 யூன் 29 ஆம் திகதி நடைபெற்ற மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதனாலும்;

2018 யூலை 05 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவும் குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற தெரிகுழு நியமிப்பதை சான்றுரைத்துள்ளதனாலும்;

இலங்கையில் இன மற்றும் மத ஒற்றுமையை பின்வரும் விடயப் பரப்புகளில் உறுதிசெய்வதை ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கு ஒரு பாராளுமன்ற தெரிகுழு நியமிக்கப்பட வேண்டும் என்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:—

(அ) அத்தகைய செயற்பாடுகளில் தேசிய ஒற்றுமையை அல்லது ஈடுபாட்டை குலைக்கும் அவதூறான கருத்து/கருத்துக்கள் பரவுவதைத் தடுத்தல் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் தனியாட்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்வதன் அவசியம்;

அதாவது, வெறுப்புணர்வை ஏற்படுத்தும் பேச்சினைத் தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளடக்குவது பொருத்தமானதாவென கலந்துரையாடித் தீர்மானித்தல்;

(ஆ) கடந்த காலத்தில் நிலவிய வேற்றுமைகளுடன் உருவாக்கப்பட்ட மோசமான விளைவுகளை எதிர்கால சந்ததியினர் அடைவதைத் தவிர்த்தல் மற்றும் அவை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரை அறிவுறுத்தல்;

(இ) மத மற்றும் தேசிய நல்லிணக்கத்தை உறுதிசெய்வதற்கு உரிய அனைத்து தரப்புகளினதும் நேரடியான மற்றும் நேர்மையான தலையீட்டுக்கும் பங்களிப்புக்கும் மதிப்பளித்தல்;

(ஈ) பாடசாலை முறைமையை இனத்தையோ அல்லது மதத்தையோ அடிப்படையாகக்கொள்ளாது வகைப்படுத்தல்;

(உ) வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களிலும் மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் வாழும் சிறுபான்மை இனத்துவக் குழுமங்களின் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கும் கலந்துரையாடல் ஊடாக அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வலுவூட்டப்பட்ட பாராளுமன்றக் குழுவினை நிறுவுதல்;

(ஊ) அறநெறிப் பாடசாலைகளை நடத்துவதற்குத் தடையாகவிருக்கின்ற தனியார் மேலதிக வகுப்புக்களை ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் நடத்துவதைத் தடைசெய்தல்;

(எ) சமய வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்கும் போதும் உருவங்களையும் சிலைகளையும் தாபிக்கும் போதும் சட்டத்தின் பொதுவான அமுல்படுத்தலுக்குத் தேவையான சம்பந்தப்பட்ட சட்ட ஏற்பாடுகளை உருவாக்குதல் மற்றும் அதற்கான பொதுவான சட்டக் கோவையின் அவசியம்;

(ஏ) இன ஒற்றுமை தொடர்பாக மாணவர்களின் உள்ளங்கள் பாழ்படுத்தப்பட்டிருக்கும் உண்மையினை அவர்களுக்குத் தெரியப்படுத்தி இனங்களுக்கு மத்தியில் தேசிய நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பினையும் உருவாக்குவதற்காக ஒரு விசேட பாடத்தினை பாடசாலைப் பாடவிதானத்தினுள் அறிமுகப்படுத்தல்;

(ஐ) பொதுமக்களின் அங்கீகாரத்தினையும் மரியாதையினையும் பெற்ற கல்வியியலாளர்கள், புலமையாளர்கள் மற்றும் மக்களிடையே பிரபல்யம் பெற்ற நபர்களின் பங்களிப்பினை இந்த இன மற்றும் சமய நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பெற்றுக்கொடுத்தல்;

(ஒ) சகல சமயங்களினாலும் தேசிய ரீதியில் பிரதிநிதித்துவம் செய்யப்படும் நிபுணர் குழாம் ஒன்றினை நிறுவுவதற்கும் மேலும் பொதுமக்களின் அங்கீகாரத்தையும் மரியாதையையும் பெற்ற கல்வியியலாளர்கள், புலமையாளர்கள் மற்றும் கீர்த்திமிக்க ஆட்களைத் திரட்டுவதன் முக்கியமும்;

(ஓ) உள்ளூர் மட்டத்தில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரதேச செயலாளர் அல்லது மாவட்டச் செயலாளரின் அனுசரணையின் கீழும் கௌரவ அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடனும் பாதுகாப்புப் படைகள், பொலிஸ் மற்றும் சமய வழிபாட்டுத்தலங்கள் ஆகியவற்றின் பங்களிப்பினைப் பெறுவதற்குப் பொறிமுறை ஒன்றினை நிறுவுதல்; அத்துடன் குறைந்தது மூன்று மாதங்களுக்கொரு தடவை மாவட்ட மட்டத்தில் மேற்குறிப்பிட்ட குழுக்களின் கலந்துரையாடலை நடத்துதல்;

(ஔ) சமூக இணையத்தளங்கள், பல்வேறு ஊடக வலையமைப்புகள், அச்சு/ இலத்திரனியல் ஊடகங்கள் ஆகியவற்றின் மூலம் கருத்துக்களை வெளியிடுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய விதிகளை உருவாக்குதல்;

(க) தேசிய ஒற்றுமையைக் குலைக்கும் செய்திகளை வெளியிடுவதைத் தடைசெய்வதற்கும் அது தொடர்பாக எவ்வாறு சட்டங்களை உருவாக்குவது என்பதுவும்;

(ங) அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் தமது கருத்துக்களைச்

சமர்ப்பிப்பதில் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு இனமும் சமமான உரிமைகளைக் கொண்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தல்;

(ச) பொய்யான மற்றும் வெறுப்புக் கூற்றுக்கள் மூலம் தேசிய நல்லிணக்கம் குலைக்கப்படுவதைத் தடுப்பதற்கும் சமயத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் ஏனைய உயர் குடியினர் போன்றவர்களின் பங்குபற்றலுடன் நடக்கும் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அவ்வாறான சூழ்நிலைகள் நிகழ்வதைத் தடுத்தல் ஊடாக நிறுவனங்களுக்கு விதிகளை உருவாக்குதல்;

(ஞ) தேசிய மொழிக் கொள்கையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்தல்;

(ய) தேசிய இணக்கத்தினை ஏற்படுத்தல் தொடர்பில் பொதுமக்களின் மனோநிலையினை சாதகமான விதத்தில் மாற்றுவதற்கும் அதன் முக்கியத்துவம் பற்றி உரிய அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் மன்றம் போன்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களினூடாக பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்தி அதனை அரசாங்கத்தினால் நிருவகித்தல்;

(ர) இன விரோத நிகழ்வொன்றின் படி ஏற்பட்ட குரோத நிலைமையின் காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டின் அழுத்தநிலைமை, நிவாரணத்தினை எதிர்பார்க்கின்ற இனக்குழுவின் ஏதேனும் நபர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாட்டினைப் பொறுப்பேற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தேவையான அதிகாரம், நிதி ஏற்பாடு மற்றும் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்துடன் கூடிய "இன உறவுகள் சபை" ஒன்றை உருவாக்குதல் தொடர்பாக தேவையான சட்டங்களை உருவாக்குதல்; மற்றும்

(ல) தேசிய பொலிஸ் திணைக்களம் மீதான சிறந்த பொது மக்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காக, பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் பொதுவாகப் பொலிஸ் முறைமை என்பவற்றைப் பரிசீலித்து மாற்றங்களைப் பரிந்துரைத்தல்.

(2) (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது இருபத்து ஐந்திற்கும் (25) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைப்பதற்கும் எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறும் அத்தகைய ஆளிடம் அல்லது அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரினால் செய்துவைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் கீழ் சாட்சி வழங்கும் சாட்சிகளை வாய்மொழி மூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறுவகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவிற்கு உதவுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்களதும் வல்லுனர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்; மற்றும்

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கையைத் தயாரிப்பதற்கும் பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பினால் தடைப்படாது அமர்வுகளை நடத்துவதற்குமான

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) குழுவானது, அதன் முதல் அமர்வுத் திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அல்லது பாராளுமன்றத்தினால் மேலதிகமாக வழங்கப்படுகின்ற வேறு கால எல்லையினுள் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. இலங்கை ஔடதங்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் அதன்படி இரண்டாம் முறை மதிப்பிடப்பட்டு, பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 53 (3) இன் கீழ் சட்டவாக்க நிலையியற் குழுவிற்குச் சபாநாயகரால் ஆற்றுப்படுத்தப்பட்டது.

**9. ஒத்திவைப்பு :** “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பி.ப. 3.25 மணிக்கு பாராளுமன்றம், 2018 செப்தெம்பர் 05 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.